Registered as a news paper.

பக்கங்கள்: பத்து


விலை: ரூபா 6.00

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1147)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 03 (02.08.2003) சனிக்கிழமை இதழ்: 303



அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டு - இலுப்படிச்சேனையிலிருந்து ஹெலிமூலம் புறப்படுவதையும் - திருகோணமலையை வந்தடைந்த பின்னர் - மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன், தமிழ்ச்செல்வனுடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளுக்கு கொடுத்த திட்டவரைபு தனக்கும் தேவை என்கிறார் சந்திரிகா

## அதன் பின்னரே பேசமுடியுமென ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

**இடைக்கால நிருவாகம் தொடர்பாக - விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள யோசனைகளை, எதுவித மாற்றமும் இன்றி தமக்கு அனுப்பி வைக்குமாறும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடிதமூலம் கேட்டுள்ளார்.**

புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த யோசனைகள் தமக்குக் கிடைத்த பின்னர் - அதுகுறித்தும், புலிகளுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு விடயம் குறித்தும், தாம் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்றும் - அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சமாதான நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சில அமைச்சர்கள் மாத்திரமன்றி, சகலரும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் - விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்கால நிருவாக யோசனைகள், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

இதேவேளை - புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனைக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் யுத்தநிறுத்த மீறல் குறித்து கண்காணிப்புக் குழு - புலிகள் சந்திப்பு

### யாழ் செயலகத்தில் நேற்று நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில், இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பான முக்கிய சந்திப்பு ஒன்று, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு, யாழ். மாவட்டச் செயலகத்தில் - நடைபெற்ற இந்தச்சந்திப்பில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில்- யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகியோரும் -

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு புதிய செயலாளர்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளராக, கே.டபிள்யு.கருணாரட்ண நியமிக்கப்பட்டிருக்கிறார். நேற்றுமுதல் இவர் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## குரங்குப்பாஞ்சான் முகாமுக்கு செல்லவேண்டிய தேவை தமக்கில்லை என்கிறார் தமிழ்ச்செல்வன்

### திருகோணமலையில் தெரிவிப்பு

(திருகோணமலை)

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், அமைந்துள்ள குரங்குப்பாஞ்சான் முகாமுக்கு நாம் நேரில், சென்று பார்வையிடவேண்டிய அவசியம் இல்லை என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக, மட்டக்களப்பில் தங்கியிருந்த அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அங்கிருந்து நேரடியாக உலங்குவானூர்தி மூலம் திருகோணமலை சென்றார்.

அவரை விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொதுமக்கள் வரவேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குழியில் வீழ்ந்த குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மலசல கூடத்திற்கென தோண்டப்பட்ட குழியில் - தேங்கியிருந்த நீரினுள், தவறுதலாக வீழ்ந்த ஒன்றரை வயதுக்குழந்தை ஒன்று மரணமடைந்தது.

உரும்பிராய் செல்வபுரத்தில் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம் பெற்ற பரிதாபகர சம்பவத்தினால் தவராசா பிரதீப் என்ற ஒன்றரைவயதுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெக்லண்ட் பார்வையிடுவார்

தமிழீழ விடுதலைப் புலிகளால், மணலாறுப் பகுதியில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும், காவல் அரண்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹெக்லண்ட் எதிர்வரும் புதன்கிழமை சென்று பார்வையிடவுள்ளதாகத் தெரியவருகிறது.

## மயிலணியில் ஐவரை காணவில்லை

சுன்னாகம் மயிலணிப் பகுதியில்- சிறுவர்கள் உட்பட 5 பேரைக் காணவில்லை என்று, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக, விசாரணைகளை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்திருக்கிறது.

## தமிழ்ச்செல்வன் நேற்று மாலை திருகோணமலைக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் திருகோணமலைக்கு நேற்றுமாலை விஜயம் செய்தார். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு மூதூர்-சேனையூர் மைதானத்தைச் சென்றடைந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில்- நாளைவரை தமிழ்ச்செல்வன் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வியாசனின் உலைக்களம் நூல் பல்கலையில் நேற்று வெளியீடு!



நூலின் முதற்பிரதியை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கனிடம் இருந்து பெறுகிறார் சிவத்தமிழ்ச்செல்வி.

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் - 'வியாசனின் உலைக்களம்' என்ற நூல் வெளியீட்டுவிழா, நேற்று கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமை தாங்கினார்.

தேசியக் கொடியை - தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் பாப்பாவும், ஈகைச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகமும் ஏற்றிவைக்க, வரவேற்புரையினை (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# நாதஸ்வர வித்துவான் கலாசூரி

# என்.கே.பத்மநாதன் அவர்களின் நினைவு மலர்



## நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதன்

யாழ்ப்பாணத்தின் புண்ணிய பூமிகளுள் ஒன்றான அளவெட்டி என்கின்ற ஓர் புண்ணிய பூமியில்தான் N.K.பத்மநாதன் அவர்கள் பிறந்தார். இவரது தந்தையார் நா.கந்தசாமி, தாயார் பரிமளம். இவரது தந்தையார் ஓர் சிறந்த நாதஸ்வரக் கலைஞர். N.K.P அவர்கட்கு நான்கு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

N.K.P அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டியில் உள்ள சீனக்கலட்டி ஞானோதயா வித்தியாலயத்தில் பயின்றார். அக்காலத்திலேயே இவர் இசையையும் விருப்பமுடன் அவரது தந்தையாரின் உதவியுடன் கற்றுவந்தார். அதன் பின்னர் இவர் நாதஸ்வர இசையை யாழ்ப்பாணம் பி.எஸ்.கந்தசாமியிடம் கற்றுவந்தார். இவரிற்கு இசையிலிருந்த திறமையும் ஆர்வமும் இவரை ஓர் சிறந்த கலைஞராக உருவாக்க வழிவகுத்தது.

இதனைத் தொடர்ந்து N.K.P அவர்கள் தனது நாதஸ்வரக் கலையை தென்னிந்திய நாதஸ்வர மேதை சீர்காழி பீ.எம்.திருநாவுக்கரசுப்பிள்ளையிடமும், திருச்சேரை கிருஸ்ண மூர்த்திப் பிள்ளையிடமும் கற்றுவந்தார். இவரது விடாமுயற்சியாலும் குருவிடமுள்ள பக்தியாலும் மிகக் குறுகிய காலத்தில் பெயர் சொல்லக்கூடிய ஓர் கலைஞராக பிரகாசிக்கத் தொடங்கினார்.

இவரது இசையின் திறமையைக் கண்ட அளவெட்டி வாழ் மக்கள் 1964ஆம் ஆண்டு பன்னாலையில் நடைபெற்ற சேக்கிழார் மாநாட்டில் வைத்து "நாதஸ்வரக் கலாநிதி" என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் மதுரையில் நடந்த இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு இவர் நாதஸ்வரக் கானமழை பொழிந்தார். அன்றிலிருந்து N.K.P அவர்கள் இந்தியக் கலைஞர்களின் கவனத்தை ஈர்த்தார்.

இவரது இந்தத் திறமைகளைக் கண்ணுற்ற இலங்கை அரசு 1982 செப்ரெம்பர் 16 ஆம் நாள் கலைஞர்களுக்கான உயர்விருதுகளுள் ஒன்றான "கலாசூரி" விருதினை அக்கால ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வழங்கிக் கௌரவித்தார்.

அக்காலத்திலேயே N.K.P அவர்கள் பல நூறு பட்டங்களைப் பெற்ற ஓர் கலைஞரானார். 1979 ஆம் ஆண்டு லண்டன் சென்ற இவரை உலகத் தமிழ் வானொலியான "B.B.Cயின் தமிழோசை" இவரைச் செவ்விகண்டது. இன்று நாம் B.B.Cயின் தொடக்கத்தில் கேட்கின்ற நாதஸ்வர இசை N.K.P அவர்களுடையதே. இதைவிட கொழும்பு நகரசபை மண்டபத்தில் N.K.P அவர்களது திருவுருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது தமிழனது படம் என்றால் அது N.K.Pயின் உடையதே.

N.K.P அவர்கள் 1957 ஆம் ஆண்டு தவில் வித்துவான் நடராஜா, பாக்கியம் தம்பதிகளின் புதல்வியான நாகேஸ்வரியை திருமணம் செய்துகொண்டார். இதன் பயனாக 7 பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுக் கொண்டார். N.K.Pயின் இசைவாரிசான முரளீதரன் என்பவர் சிறுவயதிலேயே தந்தையைப் போன்ற திறமைசாலியானார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தியப் படையினரால் 1987 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது இழப்பு N.K.P அவர்கட்கு ஓர் பேரிழப்பாகும்.

N.K.P அவர்கள் இலங்கையில் மட்டுமல்லாது, இந்தியா மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா, ஜேர்மன், அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலும் தனது நாதஸ்வர இசை மழையைப் பொழிந்து பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

N.K.P அவர்கள் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக நல்லூர் சண்முகப் பெருமானது ஆலயத்தின் ஆஸ்தான வித்துவானாக இருந்து வந்தார். அலங்காரக் கந்தனிற்கு அணி அலங்காரமாக N.K.Pயின் நாதஇசையே விளங்குகின்றது. அவர் தனது இசையால் அங்கு வருகின்ற அடியவர்களை தன்வயப்படுத்தியுள்ளார். N.K.P அவர்கள் அடியவர்களை மட்டுமன்றி இறைவனைக்கூட தன்வயப்படுத்தியதற்கு சான்றாகவுள்ள நிகழ்வு இது-

ஒரு முறை நல்லூர் எஜமானது கனவில் N.K.P அவர்கள் சந்நிதான கர்ப்பக் கிரகத்துள் நின்று கொண்டு திருப்புகழ் இசைத்ததாக கனாக் கண்டார். திடுக்குற்று எழுந்த எஜமான் மறுநாள்காலை N.K.P அவர்களை அழைத்து ஆலயக் கர்ப்பக்கிரகத்திற்குள் தனியே அழைத்து இங்கு நீர் திருப்புகழ் இசைக்கவேண்டும். இது இறைவனது ஆணை எனக்கூற N.K.P அவர்கள் கண்ணீர் மல்க நின்று திருப்புகழ் இசைத்தார்.

இதைவிட N.K.P அவர்கள் இலங்கையின் புகழ்பூத்த ஆலயங்களில் எல்லாம் தனது நாதஸ்வரத்தினால் கானமழை பொழிந்துள்ளார். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய உற்சவ காலங்களில் சுமார் 30 வருடங்கள் அம்பிகைக்கு இசை வழங்கியுள்ளார்.

N.K.P அவர்கள் தனது 71 வருட கால கலை இசைப்பயணத்தில் சாதித்தவைகள் பலநூறு. பெற்ற பட்டங்களும் பலநூறு. இவ்வாறாக தனது 71 வருட இசைவாழ்வை முடித்துக்கொண்ட N.K.P அவர்கள் கடந்த ஆடி மாதம் 15 ஆம் நாள் இவ்வுலகவாழ்வை நீத்தார். இவரது மறைவு அனைத்து இசைக்கலை ரசிகர்கட்கு மட்டுமல்ல. தமிழ் பேசுகின்ற அனைத்து மக்களுக்கும் ஓர் பேரிழப்பு ஆகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் இன்நாளில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

குணராஜா செந்தூரன்
யா/பல்கலைக்கழகம்

## எங்குற்றாய் இசையரசே?

எங்குற்றாய் இசையரசே
எம்மையெல்லாம் தவிக்க விட்டு
இங்குற்றோம் ஏழைகளாய்
செவிகள் எல்லாம் வெறிச்சோட
தங்கத்தமிழ் மகனே
பத்ம நாதப் பேராளா
சங்கம் வளர்த்த தமிழ்
இசைத்துறையின் மா மன்னா

நீ இருக்கும் சபைகளிலே
இசை இருக்கும் எழில் இருக்கும்
பார்த்திருப்போர் கேட்டிருப்போர்
பாம்பாய் மயங்கி நிற்பார்
கமலாசனத்துக் கலையரசி உன் விரலில்
குடியிருந்து தந்த இசை
மறப்போமா மன்னவனே
மாநிலத்தில் உள்ள வரை

நிமிர்ந்த நடை நேர்ப் பார்வை
நயம் நிறைந்த நற்பேச்சு
வளைந்து கொடா நேர்மை உளக் கருத்தில் தூய்மை
இவையே உன் முத்திரைகள் அறிந்தவர்கள் தாமறிவார்
நல்ல கலைஞன் எந்த விதம் வாழ்வான்?
என்ற வினா தந்தவிடை உன் வாழ்வின் உயர்குணங்கள்
வல்லவனே.... நல்லவனே ... வானுறையும் எம்மவனே
எம் இதயப் பூங்காவே .... என்றும் எங்கள் இசைமூச்சே

உன்றன் துணையும் மற்றுமுள உறவுகளும்
கண்ணீர் சொரியக் கலங்குகின்றார் எந்நாளும்
எங்கள் விழிகளிலே நீரில்லை வழிந்தோட
உன் மறைவால் ஐயா அவை அன்றே வற்றினவே
கார் வண்ண மேனிக் கண்ணாளா... கலையரசே
யார் உள்ளார் இங்கு எம்மையெல்லாம் தேற்றுதற்கு
எல்லாம் பொய்... எழிற் கனவு ..... அன்றும் இன்றும் என்றும்
நாம் பேசும் தத்துவங்கள்

### தேற்றம்

உலக நாடக அரங்கு தன்னிலே
கொண்ட பாத்திரம் அழகுறச் செய்த பின்
வந்த வாறெங்கனோ அவ்வழிப்போவதே
மானிட வாழ்க்கையாம் அது மறை வேதமாம்
இந்து தர்மம் எமக்குரை உண்மைகள்
நன்றவை ஓர்ந்தனம் நல்லை நாதனே
சொந்தமானவை யாவையோ கேளுமின்
எந்தை ஈசன் இணை மலர்ப்பாதமே.

"இசைப்பிரியன்"

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No. 021-222 2988 (சி-1291)

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை,யாழ்ப்பாணம்.
T.P.No. 222 2063 (சி-1290)

வெங்கடேஸ்வரா
125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No. 021-222 2905 (சி-1289)

சீமாட்டி புடவைக்கடல்
122, மின்சாரநிலைய வீதி,யாழ்ப்பாணம்.
T.P.No. 021-222 2196 (சி-1288)

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-1294)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225542 (சி-1293)

இளவரசி ரெக்ஸ்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P.No. 021-222 2503 (சி-1292)

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.
தெல்லிப்பழை
(சி-1287)

# இருபத்தொரு மேஜர் ஜெனரல்கள் இருந்தும் டிவிசன்களுக்கு பிரிகேடியர்களே தலைமை!

## 'சிலுமின' பத்திரிகை கூறுகின்றது

இலங்கை இராணுவத்தில் இருபத்தொரு மேஜர் ஜெனரல்கள் பதவியிலுள்ளபோதும்,

மேஜர் ஜெனரல் தர அதிகாரியைக் கட்டளையிடும் அதிகாரியாகக் கொண்டிருக்கவேண்டிய டிவிஷன்களில், ஒன்றுக்கு மட்டுமே அத்தரத்தையுடைய அதிகாரி பதவியில் இருப்பதாக, ''சிலுமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக, அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை இராணுவத்தின் டிவிஷன்களின் கட்டளை அதிகாரியாக, சம்பிரதாயமுறைப்படி, மேஜர் ஜெனரல் ஒருவரே கடமையாற்ற வேண்டும்.

ஆனால், இலங்கை இராணுவத்திலுள்ள ஒரு டிவிஷன் மட்டுமே, மேஜர் தர அதிகாரியைக் கட்டளையிடும் அதிகாரியாகக் கொண்டியங்குகின்றது. ஏனைய டிவிஷன்களின் கட்டளையிடும் அதிகாரிகளாக, பிரிகேடியர் தரத்திலுள்ள அதிகாரிகளே பதவியிலுள்ளனர்.

பிரிகேடியர் ஒருவர் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்ற வேண்டிய பிரிகேட்டிற்கு, கேணல் அல்லது லெப்.கேணல் தர அதிகாரிகளே தளபதிகளாகப் பணியாற்றுகின்றனர்.

கொழும்பிலுள்ள 11 ஆவது டிவிஷனைத்தவிர, ஏனைய சகல டிவிஷன்களுக்கும் பிரிகேடியர்களே கட்டளை அதிகாரிகளாகப் பணியாற்றிவருகின்றனர் என்றும், அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# 'ஈ சேவா' தானியங்கி முறை வர்த்தகவங்கியால் அறிமுகம்

(கொழும்பு)

முதன்முறையாக - இலங்கையில், 24 மணிநேர தானியங்கிக் கணினி முறையிலான வங்கியை இலங்கை வர்த்தக வங்கியின் கொழும்புத் தலைமைக் காரியாலயம் அறிமுகம் செய்துள்ளது.

"ஈசேவா" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சேவையின் கீழ், வங்கியின் அனைத்துச் சேவைகளையும், 24 மணிநேரமும் இந்தக் கணினி முறையிலான வங்கி இயந்திரத்தில் தாங்களாகவே செய்துகொள்ளமுடியும் என்று தெரிவிக்கும் இவ்வங்கியின் தகவல்துறை துணை முகாமையாளர் அஞ்சலோ பீரிஸ்,

பகலில் சில மணிநேரங்கள் மட்டுமே இயங்கக்கூடிய இவ்வியந்திரங்கள், ஏற்கனவே பாவனையில் இருந்தாலும்,

24 மணிநேரமும் - வங்கியின் அனைத்து விடயங்களையும் செய்யக்கூடிய வசதிகளுடன் கூடிய இயந்திரம், இலங்கையில் அறிமுகம் செய்யப்படுவது இதுவே முதல் தடவை என்றும் தெரிவித்தார்.

# அபிவிருத்திக்கான வாகனம் அமைச்சின் செயலாளரிடம்!

ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட டபிள்கப் வாகனத்தை, பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளர் - தனது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தி, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், சிலாபம் பகுதியில் மேற்கொள்ளப்படும், பெருந்தோட்ட மீள்நடுகைத் திட்டத்துக்கென வழங்கப்பட்ட வாகனத்தையே, அமைச்சின் செயலாளர் - சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தித் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து, இந்த வாகனத்தை அமைச்சின் செயலாளர் தனது சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்தி வந்தது தெரியவந்துள்ளது.

# வைத்தியர் பற்றாக்குறையை தீர்க்க உடனடி நடவடிக்கை!

## சுகாதார அமைச்சர் தயாரத்ன கூறுகிறார்

வடக்கு - கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில், போதிய வைத்தியர்கள் இன்மையால், நோயாளிகள் பாதிப்படைவதாக, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

மட்டக்களப்பில் - புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவையும், மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையையும் திறந்துவைத்து உரையாற்றிய அமைச்சர் பி.தயாரத்ன, இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, தான் உடனடி நடவடிக்கைகளை எடுத்துவருவதாகத் தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து மக்களும், தங்களது இன, மத, மொழி பேதங்களை மறந்து, இலங்கையின் நிரந்தர சமாதானத்திற்காக, தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் தயாரதன, ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டாவிட்டால், நாட்டின் முன்னேற்றம் முற்றாகப் பாழ்பட்டுவிடும் என்பதை, இந் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் உணர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுததார்.

# புலிகளின் கருத்து வெளிவராததால் கொழும்புப் பங்குச்சந்தை வீழ்ச்சி!

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் குறித்த விடுதலைப் புலிகளின் முடிவு எவ்வாறு அமையும் என்று தெரியாததால், இலங்கைப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கொழும்பு பங்குச்சந்தையின் தற்போதைய நிலைவரங்களின்படி, கொழும்புக்கான அனைத்துப் பங்குகளின் விலையில் 0.38 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன்படி, 3.97 புள்ளிகளையே கொழும்புப் பங்குகள் பதிவுசெய்துள்ளதாக, கொழும்பு நிதியறிக்கை தெரிவிக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் சாதகமான சூழ்நிலையால், இவ்வருடம் 30 வீதம் அதிகரித்த பங்குச் சந்தை, விடுதலைப் புலிகளின் சாதகமான பதில் மூலம் இன்னும் உயர வாய்ப்புள்ளதாகப் பங்குச் சந்தை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ச்சியாக உயர்ந்துசென்ற பங்குச்சந்தை, தற்போது மந்தகதியில் இருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் சாதகமான பதில், இதன் உயர்விற்கு வழிவகுக்கும் என்றும் பங்குச்சந்தைக் குழுமங்களின் பிரதிநிதி நாரன் கொதமன்ன தெரிவித்துள்ளார்.

## மிதிவெடி அபாயக் கல்வித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் நடாத்தும் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம், எதிர்வரும் 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில், அரியாலை - பொன்னம்பலம் வீதிச் சந்தியிலுள்ள காளி கோயிலில் இடம்பெறவுள்ளது. (55)

# பொலிஸாரின் செய்தி இதழில் அரசியல்வாதிகளுக்கு இடமில்லை!

## பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா அறிவிப்பு

பொலிஸ் திணைக்களத்தால் வெளியிடப்படும் 'பொலிஸ் செய்தி' என்ற பத்திரிகையில், அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் எதுவும் இனிமேல் வெளியிடப்படமாட்டாது என்று, பொலிஸ் மா அதிபர் ரி. ஆனந்தராஜா தெரிவித்தார்.

'பொலிஸ் செய்தி' முதல் இதழில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினதும், பொலிஸ் மா அதிபர் ரி.ஆனந்தராஜாவினதும் புகைப்படங்கள் பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இதேவேளை- உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் படமும் சிறியளவில் அந்தச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பணத்தில் வெளியிடப்படும் இந்தச் சஞ்சிகையில் - அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளதை அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆட்சேபித்துள்ளனர்.

இதனால், அடுத்த இதழில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புகைப்படத்தையும் பிரசுரிப்பதற்கு அனுமதி கேட்டபொழுது, பிரதமர் அதனை நிராகரித்துள்ளதாகவும் தெரியவருகிறது.



இதனால், 'பொலிஸ் செய்தி' சஞ்சிகையில், இனிமேல் அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் பிரசுரிப்பதில்லை என்று பொலிஸ் மா அதிபர் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடிதமூலமான கருத்துப்பரிமாற்றத்தைவிட நேரடிப் பேச்சுக்களையே விரும்புகிறோம்!

## அரச தரப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள், விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கு, எழுத்துமூலம் பதிலளிப்பதைவிட, நேரடியாக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, அதில் பேசுவதையே அரசதரப்பு விரும்புவதாக செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கை அரசாங்க உயர் மட்டத்தில், இதுகுறித்து விவாதிக்கப்பட்டபோது - இந்த முடிவு எட்டப்பட்டதாகவும், இது விடயமாக நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிற்குத் தகவல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

"மீண்டும் மீண்டும் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்வது ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றமல்ல, நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இதுகுறித்து ஆராயுங்கள்'' - என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கப்பல் போக்குவரத்து அமைச்சருமான ரவூப் ஹக்கீம் - பிரதமரிடமும், பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஏனைய அமைச்சர்களிடமும் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில், விடுதலைப் புலிகள் - தாங்கள் விரும்பிய திட்டத்தை, இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்பதற்கு, அவர்களுக்கு உரிமையில்லை என்று பெயர் குறிப்பிட விரும்பாத எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாக, கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# வியட்நாமும் இலங்கையும் விசா தளர்வு உடன்படிக்கை!

## அனுமதியின்றி 90 நாட்கள் தங்கலாம்

வியட்நாமுக்கும் - இலங்கைக்கும் இடையே, இரு நாட்டுப் பிரஜைகளும் விசாவின்றிப் பயணிக்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வியட்நாம் வெளிவிவகார அமைச்சர் யூயன் டீ நீயன், உள்துறை அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவுடன், கடந்த ஜூலை 21 ஆம் திகதி செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளின் பிரஜைகளும், அந்நாட்டுக் கடவுச்சீட்டுக்களுடன், விசாவின்றிப் பயணிக்க இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இதன்படி, ஆகக்கூடியது 90 நாட்களுக்கு, இவர்கள் அந்நாட்டிலே தொடர்ந்து தங்கியிருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




பத்தரமுல்லவிலுள்ள இசுருபாயவில், அமைந்துள்ள கல்வி அமைச்சின் கட்டடம் முன்பாக ஆர்பாட்டம் நடத்திய ஆசிரியர்களைக் கலைக்க, பொலிஸார் விரைந்துசெல்வதை முதலாவது படத்திலும், பொலிஸாரால் ஆசிரியர்கள் தடுத்துநிறுத்தப்படுவதை இரண்டாவது படத்திலும், தடியடிப் பிரயோகம் நடத்திய களைப்பு மிகுதியால் பொலிஸார் நீர் அருந்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி கடந்த 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்ந்துள்ளார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## மகரம்

(உத்தரம் 2,3,4, திருவோணம் அவிட்டம் 1,2 ஆம் பாதம்)



உங்களுக்கு சனிபெயர்ச்சியால் நல்ல பலன்கள் என்றாலும், குரு பெயர்ச்சியால் அந்த அளவு பலன்கள் கிடைப்பதற்கில்லை. இன்பமும், துன்பமும் கலந்த பலன்கள் கிடைக்கும் காலம். மகர ராசிக்கு குரு அட்டமத்தில் சென்று விடுகிறார்.

உழுதுண்டு வாழ்பவர் ஆயின் விளைபொருட்கள் மூலமாக நல்ல பலன் கிடைக்கும். எண்ணெய் வித்துக்கள், பூமிக்குள் விளைவன லாபம்தரும்.

மாணவர் ஆயின் கல்வி வளர்ச்சி சிறப்புற இருக்கும். நல்ல மதிப் பெண்களுடன் தேர்ச்சி இருக்கும். கணினி, மருத்துவத்துறை மாணவர்கள் புதிய பொருட்களையும், நுட்பங்களையும் கண்டுபிடிப்பார்கள்.

புதுப்புது வடிவமைப்புகளால் உயர் உலோக வியாபாரிகள் அமோகமாக லாபம் ஈட்டுவார்கள். ஆடம்பரப்பொருட்கள் லாபத்தைத் தரும்.

சிலர் புதுச் சொத்துக்கள், வண்டி, வாகனம் வாங்கி மேன்மை பெறுவர்.

பெண்களுக்குப் பொன்னாபரணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் எனச் சேரும்.

சிலர் ஆண் குழுந்தை பெறும் வாய்ப்புப் பெறுவீர்கள். மாணவர்களைவிட மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்குவர். வேலைக்குச் செல்லும் பெண்கள் பைல்களை கவனமுடன் வைத்துக்கொள்ள வேண்டும். உயர் அதிகாரிகளால் இடைஞ்சல் ஏற்படும். நகை, பணம் சேரும் காலம் என்பதில் மாற்றமில்லை. சிலருக்கு சம்பளம் எதிர்பாராத அளவு உயரும்.

கணவன் - மனைவி உறவுகள், குடும்ப ஒற்றுமை பாலும் தேனும் கலந்தாற்போல் இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சிலரின் தொழிற்சாலைகள், வீடுகள் போன்றன இடம்மாறி அமைக்கவேண்டி இருக்கும்.

இந்த இடமாற்றம் பலருக்கு யோகபலன்களைக் கொடுக்கும். நீங்கள் தொடங்கும் புதிய தொழில் முயற்சிகள் இலாபகரமாக இருக்கும். புதுப்புது ஆலய திருப்பணிகளில் கலந்துகொள்வீர்கள். ஞானியரின் தரிசனம் கிடைக்கும்.

**ஆடி**

கணவன் - மனைவியரிடம் கருத்து வேறுபாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். நீங்கள் முன்கோபம் மிக்கவராக இருப்பீர்கள். வார்த்தையில் கவனம் வேண்டும். உங்கள் சொற்கள் சுட்டெரிக்கும் விதத்தில் வெளிப்படும். நிலபுலன்கள் வாங்கும் யோகம் உண்டு. எதற்கு செலவு செய்யவேண்டுமோ அதற்குக்கூட செலவு செய்யமாட்டீர்கள். கருமியாகி விடுவீர்கள்.

**ஆவணி**

மனைவியைத் தவிர பிற பெண்களின் நட்பு இவ்வாண்டு வேண்டாம். எதற்கு வீண்வம்பை விலைக்கு வாங்குகிறீர்கள்? வேண்டாம் இந்த விபரீதம். உங்கள் இரத்தத்தில் நோய்கள் தோன்ற வாய்ப்புண்டு. ஆண் மக்கள் வழியாக பல துன்பங்களைச் சந்திக்கநேரும். அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் ஏற்படும். சிலருக்கு வெளிநாடுகளில் சென்று வாழும் யோகம் உண்டு. யாருக்கேனும் குழந்தை பிறக்கும் பாக்கியம் இருப்பின் அக்குழந்தை பெரும்பாலும் பெண் குழந்தையாக இருக்கும்.

உங்களில் சிலருக்கு மூக்குடன் தொடர்பான நோய்கள் தோன்றும். மலச்சிக்கலும் வயிற்றுத் தொல்லைகளும் கூடவே இருந்துகொண்டிருக்கும். புத்திரதோஷ நிவர்த்தி, ராகுபிரீதி செய்துகொள்ளவேண்டும்.

**புரட்டாதி**

உங்களுக்கு மார்பில் சளி, நுரையீரல் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டு. பிராணாயாமப் பயிற்சிகள் மற்றும் மூச்சுப் பயிற்சிகள் விடாது செய்து வாருங்கள். ஆஞ்சநேயர் வழிபாடு தேவை.

பகைவர்கள் எல்லோரையும் வென்று அடக்குவீர்கள். கடன் மட்டும் வாங்க எண்ணாதீர்கள். கடனை திரும்ப அடைக்க இயலாது.

உங்களால் வார்த்தை நாணயத்தைக் காப்பாற்ற முடியாது. உங்களுக்கு அரசின் ஆதரவு உண்டு. அரச அதிகாரிகளின் ஆதரவு உங்கள் பக்கம் இருக்கும். உங்களுக்கு மாமிச உணவில் விருப்பம் செல்கிறது. வேண்டாம் இந்த அவலம்.

**ஐப்பசி**

விஷக்காய்ச்சல் தோன்ற வாய்ப்புகள் உண்டு. சிலருக்கு இரத்தக் கொதிப்புத் தோன்றலாம். சிலருக்குக் கல்வி தடைப்படும். பொதுவாக இம்மாதம் சிரமமான மாதம். தெட்சணாமூர்த்தி வழிபாடு செய்யுங்கள்.

**கார்த்திகை**

சிலர் தொழில் நிமித்தம் பொய்களை அள்ளி வீசுவார்கள்.

**மார்கழி**

கல்வி நலன் சிறக்கும். அறிவுபூர்வமான நண்பர்கள் உதவிக்கு வருவார்கள். வாகன வசதி பெருகும். ஆடை ஆபரண சேர்க்கை விளங்கும். நல்ல லாபம் கிடைக்கும் மாதம். திருமால் கோயில்களுக்குச் சென்று பெருமாளைத் தரிசித்து நலன் பெறுங்கள்.

**தை**

உங்கள் கவனங்கள் அனைத்தும் நுண்கலையில் ஈடுபடுகின்றது. அதனால் உங்கள் கல்வி தடைப்படுகிறது. ஆகையால், எந்தக் கலையும் உங்களுக்கு வெற்றியைத் தராது. உங்களுக்கு லாபம் ஏதும் இல்லை. உறக்கமும் தேவையான நேரத்தில் கிடையாது. வெற்று அரசியல் பேசி சிலபேரின் பகையைத் தேடிக கொள்வீர்கள். செலவுகள் கட்டுக்க டங்காமல் இருக்கும்.

**மாசி**

பண்புநலன்கள் சிறக்கும். தெய்வ நம்பிக்கை பெருகும். புத்திசாலித்தனம் மேலோங்கும். சாஸ்திரப் பேச்சு சிறந்து விளங்கும். மற்றவர்க்குச் சாத்திரம் சொல்வீர்கள். சிலநேரம் செலவுகள் கட்டுக்கடங்காது இருக்கும். உங்களில் சிலருக்கு முகத்தில் கட்டிகள் தோன்றலாம். குளிர்ந்த உணவினை உண்ணவேண்டும்.

**பங்குனி**

உங்கள் தந்தைக்கு உதவமுடியாத தன்மைகள் தோன்றும். அவரின் சிரமங்களுக்கு அருகிருந்து உதவ முடியாது வருந்துவீர்கள். குடும்ப ஒற்றுமை குறையலாம். உங்கள் தகப்பனாரைவிட நீங்கள் புகழ் பெற்றவர் ஆக ஆவீர்கள். இசைக் கலையில் ஆர்வம் தோன்றும். உணவினைவிட நொறுக்குத் தீனிகளை உண்பதில் கட்டுக்கடங்கா ஆர்வம் தோன்றும்.

**சித்திரை**

இம்மாதத்தில் நீங்கள் அம்பாள் கோயிலுக்குச் சென்று வாருங்கள். ராகு காலத்தில் அம்பிகைக்குத் தீபம் இடுங்கள். கட்டிக்கொண்டு இருக்கும் கட்டடங்கள் பாதியில் நின்றுவிட வாய்ப்புகள் உண்டு. உறவினர்கள், சொந்த பந்தங்கள் இவர்களிடமிருந்து எதிர்பார்த்த எந்த உதவியும் கிடைக்காது.

**வைகாசி**

இம் மாதத்தில் உங்களுக்குக் குழந்தைப் பேறு இருக்குமானால், அது ஆண் குழந்தையாக இருக்கும். வயிற்றில் தொப்பை தோற்றும். ஆடம்பரமாகச் செலவு செய்வீர்கள். சூதும் வாதும் உங்களுக்கு வேதனையை மட்டும்தான் தரும். அந்தப் பக்கம் திரும்பிப் படுக்காதீர்கள்.

**ஆனி**

உங்கள் பகைகளை எல்லாம் வெல்லும் மாதம். அரசின் ஆதரவு கிடைக்கும். ஆனால், ஓர் எச்சரிக்கை - உங்கள் தலைப்பகுதியில் காயம்படலாம். இல்லையெனில் வலது கண் பாதிக்கப்படலாம். வழக்குகள் இருந்தால், அவை உங்களுக்கு அனுகூலமாக முடிவு பெறும்.

(நாளை கும்பம் தொடரும்)



பூங்கனிச் சோலையின் பின்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பூங்காவை, துரைராஜா நாடாவெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## தெல்லிப்பளை வைத்தியசாலையில்

# திருத்தப்படாத மலசலகூடக்குழியால் நோயாளர் பாதிக்கப்படும் அபாயம்!

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் - மனநோயாளர் பகுதியிலுள்ள மலசலகூடக்குழியைத் திருத்தி, புதிய மலசலகூடக்குழி அமைக்க வேண்டியுள்ளது.

இந்த மலசலகூடக்குழி திருத்தப்படாது விட்டால், மழை காலத்தில் வெள்ளநீர் புகுந்து - சுற்றாடலுக்கும், நோயாளர்களுக்கும் சுகாதாரச் சீர்கேட்டை விளைவிக்கும் என, வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை - இத்திருத்தவேலைக்கென யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கிக்கொடுக்க உறுதியளித்திருந்தார். இந்த நிதி இன்னமும் வந்து சேராததால் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளது.

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(உடுவில்)

கந்தரோடை - தமிழ் கந்தையா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க. செல்வக்குமார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு - கல்லூரியின் பழைய மாணவனும், கொழும்பு போதனா வைத்தியசாலையின் வைத்தியருமான பு.ஆதவன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வுகள்

வலி.தெற்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சிவார இறுதி நிகழ்வுகள்- நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு, மருதனார்மடம் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சிவாரப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் அன்றையதினம் இடம்பெறவுள்ளன.

(101)


## வாழ்க வளமுடன்




**முதலாவது அகவையில்**



பெயர் : ஸ். றிவால்டோ
முகவரி : சென்யூட், இளவாலை.

**ஆறாவது அகவையில்**

பெயர் : யோ.சுவிர்தா
முகவரி : அம்பாள்குளம், கிளிநொச்சி.



**ஏழாவது அகவையில்**



பெயர் : ச.சபேஸ்கா
முகவரி : பாரதி லேன், நாயன்மார்கட்டு.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------
பெற்றார் ஒப்பம்

# கழுதையும் வெள்ளாடும்

ஒரு குடியானவன் - கழுதை ஒன்றை வளர்த்து வந்தான். பிறகு, ஒரு வெள்ளாட்டையும் வாங்கி வந்தான்.

கழுதைக்குக் கிடைத்த தீனியைக் கண்டு, வெள்ளாடு பொறாமைப்பட்டது.



கழுதையைத் துன்பத்துக்குள்ளாக்க வேண்டும் என்று கருதியது வெள்ளாடு.

ஒருநாள் கழுதையிடம் "அன்பனே சுமை சுமக்கிறாய், கடினமான வேலைகளைச் செய்கிறாய். ஆயினும், உன்னைக் கேவலமாகக் கருதுகிறார்கள். இப்படி வேலை செய்தால், எத்தனை நாளைக்கு நீ உயிரோடு இருக்கமுடியும்? நீ கீழே விழுந்து பாசாங்கு செய்து, ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறியது வெள்ளாடு.

வெள்ளாட்டின் யோசனையைக் கேட்ட கழுதை கீழே விழுந்தது. அதனால், காயம் ஏற்பட்டது. குடியானவன் மருத்துவரை வரவழைத்தான். "புண்ணைக் குணப்படுத்த வெள்ளாட்டின் கொழுப்புத் தேவை" என்றான் மருத்துவன். உடனே கொழுப்புப்பிடித்த வெள்ளாடு கொல்லப்பட்டது.

## நாடுகளின் சிறப்பு

இந்து சமுத்திர முத்து - இலங்கை
மரகதத்தீவு - அயர்லாந்து
சூரிய உதயநாடு - ஜப்பான்
தங்ககோபுர நாடு - பர்மா
ஆசியாவின் நோயாளி - சீனா
பிரமிட்டுக்களின் நாடு - எகிப்து
நள்ளிரவுச் சூரியநாடு - நோர்வே
தங்கக்கம்பளி நாடு - அவுஸ்திரேலியா.

தி. ஜெனத்குமரன்
தரம் - 5, கோப்பாய் றோ.க.த.க பாடசாலை.

## அன்பே கடவுள்



கணினிப் படிப்பில் மிகுந்தாலும்,
கல்வி கலையில் சிறந்தாலும்,
மனமே நிறையும் அன்பால்தான்
மகிழ்ச்சி பொங்கும் வாழ்வுவரும்!

உயர்ந்த பதவி வகித்தாலும்,
உச்சிப் புகழ்மேல் வாழ்ந்தாலும்,
அயலார் போற்றும் அன்பால்தான்
அமைதி தங்கும் வாழ்வுவரும்!

பணத்தின் மேலே நின்றாலும்,
பட்டாய் உடுத்திக் கொண்டாலும்,
குணத்தைக் காக்கும் அன்பால்தான்
கூடும் இன்பம் வாழ்வுதரும்!

இறைவன் முன் சென்றாலும்,
இரு கை கூப்பித் தொழுதாலும்,
நிறையும் தூய அன்பால்தான்
நிம்மதியான வாழ்வுவரும்!

# தகவல் களஞ்சியம்



★ ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் பாதுகாப்புக்காக இராணுவ தளபாடங்கள், ஆயுதங்களை வைத்திருக்கின்றன. இவ்விதமான ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து, உலகின் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முதலிடம் அமெரிக்கா. இரண்டாவது இடம் ரஷ்யா, மூன்றாவது இடம் இஸ்ரேல்.

★ மற்ற நதிகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு - டேன்யூப் நதிக்கு உண்டு. இந்நதிக்கரையில் மூன்று நாடுகளின் தலைநகர்கள் அமைந்துள்ளன. யூகோஸ்லாவியாவின் தலைநகர் பெல்கிரேட், ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட், ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னா.

★ ஒட்டகங்கள் மணிக்கு 20 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியவை. பல நாட்கள் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழும். ஆனால், தண்ணீர் குடிக்க ஆரம்பித்துவிட்டால் பலமணிநேரம் குடிக்கும். பிறந்தவுடன் ஒட்டகக்குட்டி 40 கிலோ எடையிருக்கும். ஒரு வயது நிரம்பியதும் ஏழு அல்லது எட்டு மடங்கு எடை அதிகரிக்கும். ஒட்டகம் ஒரு நாளில் நான்குமுறை ஆறு லீட்டர் பால் கறக்கும். ஒட்டகப்பால் இனிப்பாக இருக்கும். தன்னுடைய குட்டி அருகில் இருந்தால்தான் ஒட்டகம் பால் கறக்கும். இல்லாவிட்டால் ஒரு சொட்டு பால்கூட கறக்கமுடியாது.

★ ஆக்ராவில் 1985 இல் கனமழை பெய்தபோது, தாஜ்மஹால் உள்ளே மழைநீர் ஒழுக ஆரம்பித்தது. எவ்வளவோ செய்தும் ஒழுகுவதை நிறுத்தமுடியவில்லை.

இறுதியில் பழைய பதிவேட்டினைப் புரட்டிப் பார்த்தபோது, 1653 இல் இதுபோல மழைநீர் ஒழுகிய செய்தியும், அப்போது வெள்ளியை உருக்கி அடைத்த செய்தியும் இருந்தது.

அதைப்பார்த்த பின் அதேமுறையைப் பயன்படுத்தி மழைநீர் ஒழுகுவதை நிறுத்தினர்.

★ மரத்தவளைகள் - ஐரோப்பா, வட, தென் அமெரிக்கா வட, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவின் வெப்ப பகுதிகளில் காணப்படுகின்றன.

அவற்றின் கால்களிலுள்ள விரல்களில் ஒரு விதப் பசைத் தன்மை இருப்பதால், மரங்களைப் பற்றிச் செல்லவும், கிளைகளில் தாவிச் செல்லவும் முடிகிறது.

ஐரோப்பாவிலுள்ள மரத்தவளைகள் - வெளிர் பச்சை நிறமுடையவை. ஆனால், அவற்றை யாராவது பயமுறுத்திவிட்டால் இருண்ட ஏற்றவாறு நிறம் மாறிவிடும்.

வட அமெரிக்காவில் இரண்டு விதமான மரத்தவளைகள் உள்ளன. ஒருவகை - குழல் ஊதுவதுபோல சத்தமிடும். மற்றொரு வகை - நம் நாட்டுத்தவளைபோல பயங்கரச்சத்தமிடும்.

## பழமொழிகள்

- அறையில் ஆடியல்லவா அம்பலத்தில் ஆடவேண்டும்.
- ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
- சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
- உண்ணார் சொத்து மண்ணாய்ப்போகும்.
- ஊரோடு ஒத்து வாழ்.
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

து.விதுஷன்
தரம். 4
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.




# மாத்திரம் போட்ட குட்டிகள்

ஓர் ஊரில் பணக்கார வியாபாரி ஒருவன் இருந்தான். பணத் துக்காகத் தவறான வழிகளிலும் அவன் நடந்தான்.

அந்த ஊரிலே நிறையப் படித்தவன் ஒருவன் இருந்தான். அந்த விதமும் வியாபாரிக்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என்று நினைத்தான்.

ஒரு நாள் - அவன், வியாபாரியின் வீட்டுக்கு வந்தான். "எங்கள் வீட்டிலே ஒரு விசேஷம். விருந்து சமைக்க பாத்திரங்கள் கொடுத்து நீங்கள் உதவவேண்டும்" என்றான்.

"பத்திரமாகப் பயன்படுத்தவேண்டும். விருந்து முடிந்ததும் உடனே திருப்பித் தந்துவிடவேண்டும்" என்று பாத்திரங்களின் பட்டியலை எழுதிக் கொண்டு, பாத்திரங்களைக் கொடுத்தான் வியாபாரி.



மூன்றாம் நாள் பாத்திரங்களைத் திருப்பித் தந்தான் படிப்பாளி.

எண்ணிக்கை சரியாக உள்ளதா என்று வியாபாரி பார்த்தான். சரியாகவே இருந்தன. ஆனால், அவற்றோடு சில சிறிய பாத்திரங்களும் இருந்தன.

"இவையெல்லாம் எப்படி வந்தன?" என்று வியாபாரி கேட்டான்.

"உங்களுடைய பெரிய பாத்திரங்கள் போட்ட குட்டிகள்தான் இவை!" என்றான் படிப்பாளி.

வியாபாரி திகைத்துப்போனான்.

மனிதர்கள் பிள்ளை பெறுவார்கள், விலங்குகள் குட்டிபோடும், பாத்திரங்கள் எப்படி குட்டிபோடும்? என்று எண்ணினான் வியாபாரி. சரி... தானாக வருவதை ஏன் மறுக்கவேண்டும் என்று, அந்த குட்டிப் பாத்திரங்களையும் வாங்கிக்கொண்டான்.

இப்படியே பலமுறை படிப்பாளி பாத்திரங்களை இரவல் வாங்குவதும், மேலும் பல குட்டிப் பாத்திரங்களுடன் அவற்றைத் திருப்பித் தருவதுமாக இருந்தான்.

ஒருமுறை விருந்து சமைக்கப் பாத்திரம் வாங்கிச்சென்ற படிப்பாளி - அழுதபடியே வியாபாரியின் வீட்டுக்கு வந்தான்.

"ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டான் வியாபாரி.

"ஐயோ!... அதை எப்படி சொல்வேன்... உங்களுடைய எல்லாப் பாத்திரங்களும் காய்ச்சல் வந்து செத்துப்போய் விட்டன" என்று அழுதான் படிப்பாளி.

இதைக் கேட்டதும் - வியாபாரிக்கு ஆத்திரம் வந்தது.

"என்ன உளறுகிறீர்கள்? பாத்திரங்கள் எப்படி காய்ச்சல் வந்து சாகும்?" என்று கோபமாகக் கேட்டான்.

"உங்கள் பாத்திரங்கள் என்ன சாதாரணப் பாத்திரங்களா? மூன்று நாட்களுக்குள் குட்டி போடுகின்ற உயிருள்ள பாத்திரங்கள் இல்லையா அவை!

உயிர் ஒரு நாளைக்குப் போகக்கூடியதுதானே? இதுவரை குட்டிபோட்ட பாத்திரங்கள், இப்போது காய்ச்சல் வந்து செத்துப் போய்விட்டன. என்ன செய்வது? அதனுடைய 'ஆயுள்' அவ்வளவு தான்." என்றான் படிப்பாளி.

திகைத்துப்போய் நின்றான் வியாபாரி.

# சிறுவர் அரங்கம்




## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### கியூபா

வாராந்தம் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் - இந்தவாரம் கியூபாவைப் பற்றி அறிந்துகொள்வோம்.

தலைநகர் - ஹவானா
பரப்பளவு - ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 524 ச.கி.மீ
மொழி - ஸ்பானிஷ்
எழுத்தறிவு - வயது வந்தோர் - 96.4 வீதம்
 - வாலிபர் - 99.7 வீதம்
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - பெசோ

கியூபா மேற்கிந்தியப் பகுதியில் அமைந்துள்ள ஒரு தீவகற்ப நாடாகும். கரும்பு உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடாக, இது இருந்து வருகின்றது.



பிடல் கஸ்ரோ

சுமார் 400 வருடங்களாக நீடித்த ஸ்பானிய ஆட்சியை அகற்ற - 1898 இல் கியூபாவிற்கு அமெரிக்கா உதவியளித்தது.

1902 ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சி நீடித்தது. 1930 ஆம் ஆண்டில் கியூபா - ஜெனரல் பாடிஸ்டா என்னும் சர்வாதிகாரியின் ஆட்சியின் கீழ் வந்தது.





1959 ஆம் ஆண்டில் - பிடெல் கஸ்ரோ புரட்சியின் மூலமாகக் கியூபாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

சீரூஸ் பழங்கள், கோப்பி, பால், புகையிலை உற்பத்தி, சிமெந்து, உரம், சீனி, கனிமம், இரும்பு நிக்கல் முதலிய முக்கிய உற்பத்திகள் இங்கு நடைபெறுகின்றன. கியூபாவின் முக்கிய நகரங்களாக ஹவானா, சான்டியாகோ கியூபா, காமகியூ, சான்டா ஆகியவை விளங்குகின்றன.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- கோ.விஜிபா
கற்கும் பாடசாலை :-
அருணோதயா முன்பள்ளி பாலர் பாடசாலை.
கற்கும் தரம் :- முன்பள்ளி.
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டு, விளையாட்டு,
வாசித்தல்.



முழுப்பெயர் :- ந.டினேஸ்
கற்கும் பாடசாலை :-
விஸ்வமடு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பேச்சு, சிறுகதை வாசித்தல்,
ஆங்கிலம்.



முழுப்பெயர் :- ச.அமலினி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, சங்கீதம், வாசிப்பு,
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- ச.நிசா
கற்கும் பாடசாலை :-
குடத்தனை அ.மி.த.க. பாடசாலை
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- சி.சிவநிபா
கற்கும் பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
கணினி, கல்வி, கவிதை.

முழுப்பெயர்:- செ.ஆன்டனியா
கற்கும் பாடசாலை :-
கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலம்
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கதை படித்தல்.

முழுப்பெயர்:- இ.சர்மிளா
கற்கும் பாடசாலை :-
யார்க்கரு விநாயர் வித்தியாலயம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## தொழிற்சாலைகளும் அமைந்துள்ள இடங்களும்

| | | |
|---|---|---|
| ரயர், ரியூப் | - | களனி |
| எண்ணெய் சுத்திகரிப்பு | - | சப்புகஸ்கந்த |
| உருக்கிரும்பு | - | ஒறுவெல |
| ஓட்டுப்பலகை | - | ஜின்தோட்டை |
| கட்டிப்பால் | - | பொலநறுவை |
| ஓடு | - | ஓட்டிசுட்டான், சிலாபம் நீர்கொழும்பு |
| இல்மனைட் | - | புல்மோட்டை |

ச.கேசனா
கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

இங்கே மடிக்கவும்



# ஏமாந்த நரி

(சென்றவாரத் தொடர்ச்சி... பகுதி 02)




# உங்கள் கைவண்ணம்



அ.சஞ்ஜீவ்
தரம் - 8
யாழ்.டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.



சு.சிந்துஜன்
தரம் - 9
சாவகச்சேரி இந்துக் கல்லூரி,


# விடுகதைகளும் விடைகளும்

1. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும், புழுதி கிளம்பாது. அது என்ன?
எறும்பு.
2. எங்கட அப்பா கொழும்புக்குப் போனார். இரண்டு மாடு வாங்கி வந்தார். ஒன்று இழுப் பாணி, மற்றது சப்பாணி. அது என்ன?
அம்மியும், குளவியும்.
3. பச்சை நிறத்தான், சிவப்பு நிறத்திற்கு மாறினான். அதன் பின்னும் வீரியம் குறைய வில்லை. அது என்ன?
மிளகாய்.
4. ஓட்டைத் தூக்கிக்கொண்டு, வீதி வீதியாய்ப் பயணம் செய்வான். அவன் யார்?
ஆமை.
5. தும்மலுக்கு வெடிக்குந் துப்பாக்கி, யாரையும் துன்புறுத்தாத துப்பாக்கி. அது?
மூக்கு.

தனுஷா.

1. பழகினால் மறக்காது, பயந்தால் விடாது. அது என்ன?
நாய்.
2. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?
கிளி.
3. பிறப்பும் இறப்பும் ஒரு மாதத்தில் அடங்கும். அவன் யார்?
நிலா.
4. பிடி இல்லாத குடையைத் தொட முடிய வில்லை. அது என்ன?
வானம்.
5. பார்ப்பதற்கு உருவம் உண்டு, எடுப்பதற்கு உடல் இல்லை. அது என்ன?
நீர்.

# சின்னக் குருவி சிறிய வீடு



குருவிக்கூடு சிறியது
குஞ்சு வாழச் சிறந்தது
உருவில் சிறிய கூடுதான்
உன்னால்கட்ட முடியுமா?

பன்னாடைகள், சருகுகள்
பனை மரத்தில் கிடைத்ததை
தன்னால் சேர்த்துக் குருவியும்
தானே கட்டிய சிறுகுடில்!

மழையைக் காற்றைத் தாங்கிடும்
வாழும் குஞ்சைக் காத்திடும்
வலிமையான கூடுதான்
வடிவங்கூட அழகுதான்.

சின்னக் குருவி முயற்சியால்
சிறியகூடு கட்டினால்
உன்னைப்போலச் சிறுவனால்
உலகை வெல்ல முடியுமே...!

ஸ்.தனுஷா
கரவெட்டி.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்

- திருக்குறள்.

# நமது நோக்கு

## சீரழிவிலிருந்து பாதுகாப்பு!

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலய உற்சவம் -நாளை ஆரம்பமாக இருக்கின்ற நிலையில், இது தொடர்பான ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமடைந்திருக்கின்றன.

நல்லூர் திருவிழா என்பது பண்பாட்டுப் பெருவிழாவாகவே குடாநாட்டு மக்களால் கருதப்படுவது வழமை. இந்த, உற்சவ காலங்களில் நாற்புறமும் இருந்து மக்கள் நல்லூரில் ஒன்று கூடுவது ஒரு பெருவிழாவாகவே இருக்கும் .

இந்த வகையில், இம்முறையும் பெருமளவான மக்கள் குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி- நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நல்லூரில் ஒன்று கூடுவர் என்பதைச் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

இவ்வாறு - தமிழர்களின் பண்பாட்டு விழா நடைபெறும், நல்லைக்கந்தன் ஆலயச் சூலலில் எப்போதுமே சர்ச்சைக்குரிய சம்பவங்கள் ஆங்காங்கே நிகழ்வது வழக்கமாகிவிட்டது.

ஆலயச் சூழல் என்ற புனிதத்தன்மையை களங்கப்படுத்தும் வகையில் - கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுவது, கடந்த வருடங்களில் மும்முரமடைந்திருந்தன.

இந்தவருட உற்சவங்களிலும் இத்தகைய கலாசார சீரழிவுச் செயற்பாடுகள் குறித்த விழிப்புணர்வுடன் செயற்படுமாறு, பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

சமூக கலாசார சீரழிவுகளுக்கு ஆலயச் சூழல்களோ, கலாசார நிகழ்வுகள் இடம்பெறும் பொது இடங்களோ, எந்தவகையிலும் களமாக பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது, அனுமதிக்கவும் கூடாது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் ஒன்றுகூடும்போது, வழமையை விட இம்முறை சிங்கள மக்கள் அதிகமாக இங்கு கூடலாம். என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் , இந்த மண்ணில் கலாசாரச் சீரழிவுகள் அரங்கேற்றப்படுவதை எவராலும் பொறுத்துக்கொள்ள முடியாது.

தமிழர்கள் தமக்கென தனியான பாரம்பரிய கலாசார விழுமியங்களைக் கொண்டிருக்கும் நிலையில், பொது இடங்களில் இந்தப்பண்புகளைக் கேளிக்கைக்குரியதாக்கி - சந்தி சிரிக்க வைப்பதை ஒரு போதும் அனுமதிக்கமுடியாது.

இதனால் தான், இம்முறை கலாசாரத்தைப் பேணும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவதற்குரிய ஒழுங்கமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இங்கே, கலாசாரத்தைப்பேணும் குழுக்கள் மற்றும் தொண்டர்கள் மட்டுமே இந்தப் பணியில் ஈடுபடவேண்டும் என்றோ - நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோ, எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

எங்கே தமிழர்களின் கலாசாரம் சீர்குலைக்கப்படுகிறது என கருதப்படுகிறதோ, அங்கே ஒவ்வொரு மனிதனும் சமூகக்கடமையை உணர்ந்து விழித்துக்கொள்ள வேண்டியவனாகின்றான்.

ஒருசமூகம், ஒவ்வொரு தனிமனிதனதும் நடத்தைக்கோலங்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இந்த வகையில், தமக்குரிய பண்பாட்டை, அதன் சிறப்பைச் சீரழிக்கும் வகையில் - செயற்பட்டு மற்றவர்களுக்கு முன்பாக தலைகுனியச் செய்யும் செயல்களில் ஈடுபடுவதை முற்றாக கட்டுப்படுத்தவேண்டும்.

இதற்கான முழுப்பொறுப்புமே அனைத்து மக்களையும் சாரும். இதனை அனைவருமே சமூகக் கடமையாக ஏற்கவேண்டும். ஈழத்தமிழரின் சுயமரியாதையைத் தக்கவைத்துக் கொள்ளுகின்ற இந்த முயற்சிக்கு, அனைவருமே ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது கட்டாயமாகிறது.

இந்தத் தேசியகடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதில் மட்டுமல்லாது இத்தகைய கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவோர்கூட நல்ல வழியில் நடக்க முற்படுவது அவசியமாகும்.

# புதிய வாக்காளர்களைப் பதிவதற்கான காலஎல்லையை நீடிப்பதாக அறிவிப்பு!

## மகிந்தவுடனான சந்திப்பில் தேர்தல் ஆணையாளர்

வாக்காளர் இடாப்பில் புதிய வாக்காளர்களைப் பதிவுசெய்யும் காலஎல்லை இம்மாதம் முப்பதாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டீ சில்வா ஆகியோர் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளையடுத்தே, இந்தக் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சில கிராமசேவகர்கள் - அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு, வாக்காளர்களைப் பதிவுசெய்வதில் பின்னடித்து வருகின்றனர். இப்படியான கிராமசேவகர்களுக்கு எதிராக, தேர்தல் ஆணையாளரிடம் முறையிடலாம் என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - நாட்டிலுள்ள ஏழு மாகாணசபைகளின் பதவிக்காலம், அடுத்த வருடத்துடன் முடிவடையவுள்ளது. மாகாணசபைகளின் பதவிக்காலம் முடிவடைந்ததும், தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமென்றும் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்துப் பிரதமர் கொழும்பு வருகிறார்

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சினவத்ரா இரண்டு நாள் விஜயமாக எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும்போது, தாய்லாந்து பிரதமர்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என, வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் தாய்லாந்து பிரதமர் இங்கு விஜயம் செய்வதாக இருந்தபோதும், தென்பகுதியில் பெய்த கடும்மழையால், அவரது விஜயம் ரத்துச்செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும்!

(கொழும்பு)

கடந்த ஏப்ரல்மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள், அடுத்தவாரம் வெளியிடப்படும் என்று - பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர்தரப்பரீட்சையில் சுமார் இரண்டரை இலட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

மேலும், இப்பரீட்சையின் பெறுபேறுகள் இணையதளம் ஊடாக வெளியிடப்படவிருப்பதாகவும், பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு பொலிஸ்மா அதிபருக்கும் அழைப்பு!

## நாடாளுமன்றப் பாதுகாப்புக் குறித்து விவாதிக்கப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடல் நடத்துவதற்கு, கட்சித் தலைவர்களின் அடுத்த கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் ரி.ஏ.ஆனந்தராஜாவுக்குச் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரோ அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றக் கூட்டங்களின்போது - மலர் வளையங்கள், மர்மப் பொதிகள், சவப்பெட்டி என்பன எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தே, நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் - பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுடன், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

# நல்லூர் உற்சவகால ஒழுங்குமுறை; யாழ்.மாநகர சபையினரால் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு, யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற - உற்சவகாலச் சிறப்புச் செயலணிக்குழுக் கூட்டத்தில், ஒழுங்கு முறைகள் குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவகாலத்தில் மேற்கொள்ளவேண்டிய வழமையான நடவடிக்கைகளை - யாழ்.மாநகரசபை மேற்கொள்ளும். அவற்றிற்கு உதவியாகச் சிறப்புச் செயலணிக்குழு செயற்படும்.

வீதியுடன் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைமுகாம்களில்- மாநகரசபை உத்தியோகத்தர்கள் 2 பேரும், சிறப்பு செயலணிக்குழு உறுப்பினர் ஒருவரும், தொண்டர் நிறுவன அங்கத்தவர் 2 பேரும் கடமையில் ஈடுபடுவர்.

10 ஆம் திருவிழாவரை, அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 3 மணிவரையும், 10 ஆம் திருவிழாவிற்குப் பின்னர்- அதிகாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணிவரையும் தடைமுகாம்களில் பாதுகாப்பு சேவை இடம்பெறும்.

நண்பகல் 12 மணியிலிருந்து, பிற்பகல் 3 மணிவரை தடைமுகாம்களினூடாக வியாபாரிகளின் வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் - சீருடையுடன் காலை 8.30 மணிவரை தடைமுகாம்களுக்கூடாகப் பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுவர். பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது அவர்கள் மாற்று வழியினைப் பயன்படுத்தவேண்டும்.

துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் அதிகாலை 4 மணிக்குத் திறக்கப்படவேண்டும்.

தடைமுகாம்களுக்குள் வசிப்பவர்களுக்கும், தொழில்நிலையம் வைத்திருப்பவர்களுக்கும் - வாகனம் உட்செல்வதற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவர்கள், ஏற்கனவே குறிப்பிட்ட வீதி தடைமுகாம் ஊடாகச் செல்வதற்கு மட்டுமே அந்த அனுமதி அட்டையினைப் பயன்படுத்தவேண்டும்.

சிறப்பு செயலணிக்குழு - தினமும் ஒன்றுகூடி, ஆலயச் சூழலில் அன்றாடம் எழும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் முடிவு எடுக்கும்.

சகல பொதுநிறுவனங்களும், அரச நிறுவனங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும், பாதுகாப்பு பிரிவினரும் எந்தவொரு காரணத்தை முன்னிட்டும், தடை முகாம்களூடாக வாகனங்கள் செல்லமுடியாது எனத் தீர்மானிக்கப்பட்ட நேரங்களில், வாகனங்களுடன் உட்செல்லாது ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென, எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்படும்.

எந்த சந்தர்ப்பத்திலும், எக்காரணம் கொண்டும் - வாகனங்களைக் கோயில் வீதியில் நிறுத்தக் கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களும் - சிறப்புச் செயலணிக்குழுவுடன் இணைந்து செயற்படுவார்கள். கலாசாரத்தைச் சீர ழிக்கும் விதத்தில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு, அவற்றை உடனுக்குடன் சிறப்புச் செயலணிக் குழுவிற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பு மூலம் தொடர்பு கொள்ளுமாறு - பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுவோரும், பொதுமக்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிற்துறைத் திணைக்கள கைத்தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் மாகாண் மட்டத்திலான கைத்தொழில் கண்காட்சி - செப்ரெம்பர் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எமது பிரதேசத்திலுள்ள சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படவுள்ள இக்கண்காட்சியில், பங்குகொண்டு தங்கள் உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் - யாழ்ப்பாணம் கச்சேரியில் இயங்கும் தொழிற்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலகத்தில், இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று; பூரணப்படுத்தி - எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு மாவட்ட அலுவலர் அறிவித்துள்ளார்.

# பொ.ஐ.மு. மத்திய செயற்குழு நாளைமறுநாள் கூடுகிறது!

## ஜே.வி.பி. கூட்டணி குறித்து விவாதிக்கப்படும்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய செயற்குழுவின் நிறைவேற்றுக்குழுக்கூட்டம் - நாளைமறுநாள் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்படவிருக்கும் கூட்டணி தொடர்பாக, விரிவாகக் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கட்சியின் பொதுச்செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

# அரசு முன்வைத்த யோசனைகளும் சந்தித்து நிற்கின்ற நெருக்கடிகளும்



இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடரச்செய்யும் வகையில், அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கான, மாகாண நிர்வாக அலகு தொடர்பான பல்வேறு விதமான பேச்சுக்கள், இன்னமும் கொழும்பு அரசியல் அரங்கில் அடிபட்டவண்ணம் இருக்கின்றன.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஊடாக- புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த யோசனைகள் குறித்து, புலிகள் தரப்பில் இன்னமும் எந்த அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை. இந்த யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யோசனையின் நகல்கள் - லண்டனிலுள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் மற்றும் அமெரிக்காவிலுள்ள சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடமிருந்தும் பதில்கள் எதிர்பார்க்கப்பட்டு வருவதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருடனும் இது தொடர்பாக விரிவாக ஆராய்வதற்காக, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் விரைவில் வெளிநாடு செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நோர்வேயில் அல்லது பிறிதொரு நாட்டில் இந்த விசேட சந்திப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு வெளியே, போதிய அதிகாரங்களைக் கொண்டதாக, இந்த நிர்வாக அலகை வழங்கவேண்டும் என்று புலிகள் முன்னர் வீடுத்திருந்த கோரிக்கைக்கு மாறாக, பலவகைகளிலும் குறைந்தளவு அதிகாரங்கள் கொண்டதாகவே முன்வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இந்த யோசனைகள் குறித்து - விரிவாக ஆராய்ந்த பின்னரே, தமது பதிலை அளிக்கமுடியும் என்றும், புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது தொடர்பாகச் செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கும்போதே- புலிகளது பதிலுக்குப் போதிய அவகாசம் கொடுக்க விரும்புவதாகவே அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### பிரதமர் குறிப்பிடும் மார்க்கம்

இதனிடையே - தமது இந்தப் புதிய யோசனைகள் தொடர்பாக, பொலநறுவையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - தமது இந்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிர்வாக அலகை - அமைச்சரவைத் தீர்மானம் மூலமோ, அன்றி ஒரு விசேட அறிவிப்பின் மூலமோ நடைமுறைக்குக் கொண்டுவரமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிர்வாக அலகுகள் முன்னரும் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அவர் அங்கு சுட்டிக்காட்டிப் பேசியிருந்தார்.

ஜனாதிபதியின் சம்மதமின்றி எவ்வாறு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாக எழக்கூடிய சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்காகவே, இந்த வழிமுறையைப் பிரதமர் கையாளவுள்ளார் என்று கருத இடமுண்டு. இதேநேரம், இந்த புதிய யோசனைகளின்படி உருவாக்கப்படவிருக்கும் மாகாண நிர்வாக அலகில், எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கியமுன்னணிக்கும் இடம் வழங்கப்படவுள்ளதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

### ஜனாதிபதியின் சர்ச்சை

ரணில் அரசாங்கம் புதிதாகச் சமர்ப்பித்துள்ள இந்த மாகாண நிர்வாக அலகு யோசனைகளின் பிரதி, இம்முறை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பரிசீலித்து, ஜனாதிபதி தன்னுடைய ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம் என்று ரணில் அரசு தெரிவித்திருந்தது.

இது தொடர்பாகப் பரிசீலித்து- கடந்த 22 ஆம் திகதி இரவு தொலைக்காட்சியூடாக ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுவார் என்று, முதலில் ஒரு அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இது பின்னர் இரத்துச்செய்யப்பட்டது. ரணில் அர



சாங்கத்தினால் - விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனைகளுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனையின் பிரதிகளுக்கும் இடையே வித்தியாசம் இருப்பதாகத் தெரிவிக்கப்படும் ஊகங்களையடுத்தே ஜனாதிபதி தனது உரையினைக் கடைசிநேரத்தில் இரத்துச் செய்வதாக அறிவித்திருந்தார்.

ஊடகங்களுக்கு வெளியிடப்படாமல், அரசாங்கத்தினால் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனையின் பிரதியொன்றை, கொழும்பு ஆங்கில வாரப்பத்திரிகையொன்று எப்படியோ கண்டுபிடித்து வெளியிட்டிருந்தது. இதனையடுத்தே இந்தச் சர்ச்சை எழுந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. பின்னர், இது தொடர்பாக விளக்கமொன்றை - அரசியல்மைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நடத்திய அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் வழங்கியிருந்தார்.

புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட யோசனைகளுக்கும், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டதற்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்தன என்பதை, இந்த மாநாட்டில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அரசின் யோசனைகள் தொடர்பில் நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க் வழங்கிய ஆலோசனைகளையும் இணைத்துப் புலிகளுக்கு அனுப்பிவைத்ததாகத் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதிக்குத் தாம் அனுப்பிவைத்தது- முதலில் தம்மால் உருவாக்கப்பட்ட யோசனைகள் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த விவகாரம், மேலும் சர்ச்சைகளைக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தோற்றுவித்திருக்கிறது.

### ஹக்கீம் - அதாவுல்லா மோதல்

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் புதிதாக மாகாண நிர்வாக அலகு யோசனை முன்வைக்கப்பட்ட பின்னர், இதில் தமது பங்கு குறித்தும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ளனர். பேச்சுக்களில் தாமும் தனித்தரப்பாகப் பங்குபற்றவேண்டும் என்கின்ற கோரிக்கையை, நீண்டகாலம் முன்வைத்துவரும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த நிர்வாக அலகு யோசனைகள் குறித்த பேச்சுக்களிலும் - தாம் தனித்தரப்பாகக் கலந்துகொள்ளவேண்டும் என்று கோரியிருந்தனர். முஸ்லிம்களது இந்தக் கோரிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளநிலையில், இந்த நிர்வாக அலகுக்குள் தமது பங்கு என்ன என்பது குறித்து இவர்கள் கேள்வி எழுப்பிவருகின்றனர்.

இது தொடர்பாக, விசேட சந்திப்பொன்றை நடத்தியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அமைச்சர்களான ஹக்கீம், அதாவுல்லா ஆகியோரிடையே நடைபெற்ற தர்க்கத்தையடுத்து, அந்தச் சந்திப்பை ரத்துச்செய்தார். இணைக்கப்பட்ட வடக்கும், கிழக்கும் பிரிக்கப்படவேண்டும் என்று அமைச்சர் அதாவுல்லா விடுத்த கோரிக்கையையடுத்தே, இந்தத் தர்க்கம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைக்கப்பட்ட வடக்கும், கிழக்கும் பிரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை, அண்மைக் காலமாகவே தொடர்ச்சியாக அமைச்சர் அதாவுல்லா விடுத்துவருகிறார்.

இந்த விடயம் தமிழ்க்கட்சி வட்



டாரங்களிலும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வுதொடர்பாக, முக்கியமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்வு முயற்சியின் ஒரேயொரு நன்மையாகக் கருதப்படுகின்ற வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பையும், இரத்துச்செய்ய வேண்டும் என, அதாவுல்லா விடுத்த கோரிக்கை, தீர்வு முயற்சிகளைக் குழப்புவதற்கான சதி முயற்சி என்கின்ற சந்தேகம் வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

தனது இந்தக் கோரிக்கையை- பிரதமருடனான சந்திப்பின்போதும் அதாவுல்லா முன்வைத்தபோது, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனை மறுதலித்துள்ளார். இதனையடுத்தே இவர்களுக்கிடையிலான முரண்பாடு எழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து, அரசின் இந்தப் புதிய யோசனைகள் தொடர்பாக ஆராய்வதற்கென ஒரு உபகுழுவொன்றை அமைத்திருக்கிறார்கள். ☆

*நன்றி - நம்நாடு*

---

# காணாமற்போன வயோதிபப் பெண் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டார்

(நெல்லியடி)

மூன்று தினங்களாகக் காணாமற்போன வயோதிபப் பெண்ணொருவர் தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியைச் சேர்ந்த, வேலுப்பிள்ளை சரஸ்வதி (வயது 75) என்பவரே நெல்லியடி வடலிச் சந்தைத் தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து, நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமற்போன இவரைத் தேடும் முயற்சியில் இவரது உறவினர்கள் ஈடுபட்டபோதிலும் கண்டுபிடிக்கமுடியவில்லை. கிணறு ஒன்றில் சடலம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அங்கு சென்று பார்வையிட்டபோது, சடலமாக இவர் மீட்கப்பட்டார்.

சடலத்தை - பொலிஸார் முன்னிலையில் கிணற்றில் இறங்கி மீட்க முற்பட்டவேளை, வயோதிபப் பெண் அணிந்திருந்த ஆடையினுள் இருந்து, இரு நாகபாம்புகள் சீறிப் பாய்ந்தன. இரு பாம்புகளையும் கிணற்றினுள் அடித்துக் கொன்ற பின்பே, சடலம் மீட்கப்பட்டது.

மேற்படி சடலம் மந்திகை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

# நல்லூர் உற்சவ காலங்களில் போக்குவரத்து ஒழுங்கு விதிகள்

நல்லூர் கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, கீழ்க் குறிப்பிடப்படும் வீதிகள் - நாளை தொடக்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

அரசடிச் சந்திக்கும் - 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி,

பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் அப்பாகம்,

செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து - செட்டித்தெரு வடபாகம்

பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் - ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லலாம்.

பருத்தித்துறை வீதிக்கும் - நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் - பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடைசெய்யப்படும் என, யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

# சட்டவிரோத மின்பாவனையாளர் சிக்கினர்

அச்சுவேலி வடக்கில் - சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்கள், அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள், தலா ஆறாயிரம் ரூபா தண்டப்பணமாக நீதிமன்றுக்கு செலுத்தியுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோதமான மின்பாவனையை நிறுத்துமாறு நீதிபதி பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 4

(தொடர்ச்சி...)

### விலங்குவிசர் அல்லது விசர் நாய்க்கடி (RABIES)

இந்த நோய், றப்டோ குடும்ப (**RABDO VIRUS FAMILY**) வைரஸினால் ஏற்படுத்தப்படும். இந்த நோய் ஏற்பட்டவருக்கு, நீரைக் காண்தல் அல்லது நீர்பாயும் ஒலி போன்றவை தொண்டைப் பகுதியில் தசைப்பிடிப்பை ஏற்படுத்தி, நீரை விழுங்கமுடியாத நிலையை ஏற்படுத்தும். நோயாளி இதன் காரணமாக நீரை வெறுப்பதால், இது நீர்வெறுப்பு நோய் (**HYDROPHOBIA**) எனவும் அழைக்கப்படுகிறது. இளஞ்சூட்டுக் குருதியுள்ள (**WARM BLOODED ANIMALS**) எல்லா விலங்குகளும் இந்த நோயினால் பாதிக்கப்படும் வாய்ப்புண்டு. ஆனால் - நாய், ஓநாய், வௌவால் போன்றவற்றையே இந்த நோய் அதிகமாகத் தாக்குகிறது. நாய் பிறந்து ஆறாவது கிழமை, மூன்றாவது மாதம், பின்னர் நாயின் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நாய்களுக்கு **ARV** தடுப்பூசி ஏற்றுவதன்மூலம், நாய்க்கு இந்த நோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இந்த ஊசி மருந்து எப்பொழுதும் கிடைக்காதிருப்பதால், இந்த அட்டவணைப்படி தடுப்பூசி ஏற்றமுடிவதில்லை.

நோயுள்ள விலங்குகளின் உமிழ்நீரில் இருக்கும் வைரஸ் மூலமே இந்த நோய் தொற்றுகிறது. நோயுற்ற நாயில், நோயின் குணங்குறிகள் தெரிவதற்கு 4 நாட்களுக்கு முன்னரே, அதன் உமிழ்நீரில் வைரஸ் இருக்கும் நோயுற்ற ஓநாய் அல்லது நோயுள்ளவர் - நோயற்றவரைக் கடிக்கும் போதும், நோயுற்றவரின் உடற்பகுதி (சிறுநீரகம் அல்லது விழிவெண்படலம் போன்றவை) இன்னொருவருக்குப் பொருத்தப்படும் போதும், விசர்நாய் கடிக்கும்போதும் இந்தநோய் தொற்றும். மேலும் புண், காயமுள்ள இடங்கள், தோல் சிதைவடைந்த இடங்கள், சீதமென சவ்வு போன்றவற்றை விசர்நாய் நக்குவதனாலும், இந்த நோய் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

இந்த வைரசுகள் தொற்று ஏற்பட்ட தசைக்கலங்களில் ஆரம்பத்தில் பெருகும். சில கிழமைகள் அல்லது சில மாதங்களில் நரம்பு நார்கள் மூலம் கடத்தப்பட்டு, உமிழ்நீர்ச் சுரப்பியையும், மூளையையும் அடைந்து, அங்கு பெருகி, அவற்றையும் தாக்கும்.

இந்த நோய் உக்கிரவகை (**FURIOUS TYPE**) சாந்த வகை (**DUMB TYPE**) என இருவகைப்படும். உக்கிரவகை விசர் நோயுள்ள நாய், அனுமதியின்றியும் கட்டுப்பாடின்றியும் திரியும், நீரைக் கண்டால் பயப்படும். கண்டபடி எல்லாவற்றையும் கடிக்கும். குரலில் மாற்றம் இருக்கும். கண் சிவந்திருக்கும். உமிழ்நீர்சொரிந்துகொண்டிருக்கும். இந்தக் குணங்குறிகள் வெளிப்படையாகத் தெரிவதால் இந்த வகை நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்.....)

# பொலிஸ்மா அதிபரின் கூற்றை ஈ.பி.டி.பி. கட்சி மறுக்கின்றது!

கல்கிசையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட ரகுபதி என்பவர்- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினராக ஒருபோதும் செயற்பட்டவர் அல்ல. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இராணுவத்தரப்பின் உளவாளிகளாகச் செயற்படுபவர்கள் அல்ல. இவ்வாறு அக்கட்சியின் தகவல் தொடர்புச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும்,

தெஹிவளைப் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியான சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையில் - பொலிஸ்மா அதிபர், ரகுபதியை ஈ.பி.டி.பி உறுப்பினர் என்ற வகையிலும், இராணுவ உளவாளி என்ற வகையிலும் சித்தரித்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனால், இத்தகவல்கள் அடிப்படை ஆதாரங்கள் எதுவுமற்றவையாகும்.

கொலையுண்டவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவது என்பது ஒரு மனிதநேய செயற்பாடாகும். உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிப்பதும், ஆறுதல் கூறுவதும் சாதாரண மனிதப்பண்பு.

அதேவேளை, கொலையுண்ட ரகுபதியின் இறுதிச் சடங்குகளில் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தா, மாறுவேடத்தில் சென்றதாகக் கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும், எனக் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1184)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

இன்றுமுதல் - முரளி, தேவயானி நடித்த

**காதலுடன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

BLUE STREAK

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)


## 23 ஆவது வருட நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 - 11 - 1935 | 02 - 08 - 1980 |

### அமரர் சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்

(சார்ஜன்)

நீண்டிட்ட காலந்தனில்....
நின்துணை என்றும் எம்மோடு - என்ற
நீங்காத நினைவுகளுடன்....

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரங்கள்

கனால் லேன்,
மாதகல்.

றக்கா லேன்,
யாழ்ப்பாணம்.

(438)

## சிறுவிளம்பரம்

### O/L கணிதம்

ஆரம்ப கணித அறிவில்லாதவர்களுக்கு, குறைந்த காலத்தில் விசேடசித்திக்குக் கற்பிப்பதில் 38 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00. க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (436)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பிரஜாவுரிமையுள்ளவரும், தற்போது இங்கு சொந்தமாகத் தொழில்புரிபவருக்கு செவ்வாய்க் குற்றமற்ற 40 வயது மணமகள் தேவை. தயவுசெய்து ஜாதகக் குறிப்புடன் படத்தையும் இணைத்து தொடர்புகொள்ளவும். விளம்பர இல.11, நமது ஈழநாடு, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (441)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

**Spoken English With Grammar**

N.Vigneswaran Archery

Black Road, Chankanai

426 (302), K.K.S. Road, Jaffna.

(சி-1296)


# நடுவப்பணியகம் - ஆயப்பகுதி நிதித்துறை

## பணிநிலை வேண்டுகைகள்

## 01. ஆய உதவியாளர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக்கண்காணிப்பு நிலையங்களில் ஆய உதவியாளராகப் பணியாற்றுவதற்கு கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தகைமை**

1. க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 02. வழிகாட்டுநர்

புளியங்குளத்தில் அமைந்துள்ள ஆயக்கண்காணிப்பு நிலையங்களில் வழிகாட்டுநர்களாகப் பணியாற்றுவதற்குக் கீழ்வரும் தகைமையுடையவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**தகைமைகள்**

1) ஆங்கிலம் அல்லது சிங்களம் ஆகிய மொழிகளில் அல்லது இதில் ஏதாவது ஒரு மொழியில் சரளமாக உரையாடக்கூடிய ஆற்றல்.

2) க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல்.

**பணி நிபந்தனைகள்**

1) 3 மாதங்களைப் பயிற்சிக்காலமாகக்கொண்ட இந்நியமனம், பயிற்சிக்காலச் செயற்பாடுகளின் அடிப்படையில் நிரந்தரமாக்கப்படும்.

2) வேதனமும், ஏனைய படிகளும் ஆயப்பகுதிச் சுற்றறிக்கைகளுக்கமைய வழங்கப்படும்.

மேற்படி தகைமையுடையவர்களும், ஏற்கனவே ஜூலை மாதம் 9 ஆம், 10 ஆம் 11 ஆம் நாள்களில் வெளியிடப்பட்ட எமது ஆயப்பகுதிப் பணிநிலை வேண்டுகைகளுக்கமைய சுயவிபரங்களை அனுப்பிவைத்தோரும், கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு 2003.08.08 ஆம் நாள் காலை 10 மணிக்கு கல்விச் சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் நேரில் வருகைதரவும்.

**மனிதவளப்பிரிவு,**
**நடுவப்பணியகம், ஆயப்பகுதி.**

(சி-1300)

**தொ.பே.எண்.**
**021 - 2225708**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ரயில்சேவைகள் இந்திய நிறுவனத்திடமா? மறுக்கிறார் அமைச்சர் திலக் மாரப்பன!

இந்திய நிறுவனமொன்றுக்கு, ரயில்வே சேவையை - விற்பனை செய்ய இருப்பதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன மறுத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த ரைட் சகோதரர்கள் நிறுவனம் - ரயில் சேவையை கொள்வனவு செய்வதற்காக, முயற்சிகள் மேற்கொண்டிருந்தது என்ற செய்தியில், எதுவித உண்மையுமில்லை என்று, அமைச்சர் தெரிவித்தார்.

ரயில்சேவையைக் கொள்வனவு செய்ய இருப்பதற்கான விண்ணப்பத்தை, ரைட் சகோதரர் நிறுவனம்- போக்குவரத்து அமைச்சுக்கு அழைப்பு ஒன்றினை அனுப்பியிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதில் எந்தவித உண்மையுமில்லை எனவும், அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

## குரங்குப்பாஞ்சான் முகாமுக்கு...

றனர். பின்னர் - செய்தியாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய தமிழ்ச்செல்வன் -

குரங்குப்பாஞ்சானில், புதிதாக அமைக்கப்பட்டதாக கூறப்படும் முகாமை நேரில் சென்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

அது, எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இந்த முகாம் தொடர்பாக கட்டளைத் தளபதி பதுமன், எமக்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளார் என தெரிவித்த தமிழ்ச்செல்வன், இந்த முகாம் பற்றி ஊடகங்களே பெரிதுபடுத்திக் கூறுவதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபில், புதிய விடயங்களைத் தாம் சேர்ப்பதுபற்றி ஆலோசித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.(01,04,10)

## ஜனாதிபதி...

இதுவரை காலமும் இவர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். ஏற்கனவே, ஜனாதிபதியின் செயலாளராகக் கடமையாற்றிய பாலபத்த பெண்டி ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே, இப்புதிய நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

## புலிகளுக்கு கொடுத்த...

ளுக்கும், தமக்குக் கிடைத்த யோசனைகளுக்கும் இடையில், பாரதூரமான வேறுபாடுகள் இருப்பதால்- அது தொடர்பான இரகசியத்தைத் தொடர்ந்தும் பேணமுடியாது.

அத்துடன்- இந்த விடயம் குறித்துத் தமது கட்சியின் தலைவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவிக்க தாம் தீர்மானித்துள்ளதாகவும், சந்திரிகா - பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இடைக்கால நிர்வாகத்திட்ட வரைபு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பொ.ஐ.மு.வின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம-

அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளில் - நோர்வேயின் முனாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சில திருத்தங்களைச் செய்ததாக, அரச தரப்புத் தெரிவித்தமை - ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்ததுடன்

இவ்வாறு, அரசாங்கத்தின் ஆவணங்களைத் திருத்தும் அதிகாரம், எவ்வாறு நோர்வே முன்னாள் தூதுவருக்கு வழங்கப்பட்டதெனவும் கேள்வி எழுப்பினார்.

## நல்லூர் ஆலயச் சூழலில்

# கலாசார சீரழிவில் ஈடுபடுவோர் குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

## நல்லூர் கோட்ட அரசியற் பொறுப்பாளர் கோரிக்கை

நல்லூர் உற்சவ காலங்களில் - தமிழர் கலாசாரப் பண்பாடு தொடர்பான, சிரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு - பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு நல்லூர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

உற்சவ காலங்களின்போது ஏற்படுகின்ற கலாசாரச் சீரழிவுகள், திருடர்களின் தொல்லை தொடர்பாக, மக்கள் அவதானமாக இருந்து - இவ்வாறான செயற்பாடுகளில் தொடர்புடையோரை இனங்காண்பது, மக்களின் பணியாகும்.

இவ்வாறு இனங்காணப்பட்ட நபர்கள் தொடர்பாக, 'கலாசாரத்தைப் பேணும் குழு' வினரோடு தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

கலாசாரத்தைப் பேணும் குழுவினர் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் உன்னிப்பாகக் கண்காணிப்பர் என்றும், கலாசாரத்தைப் பேணும் குழுவினரின் சிறப்புக் கண்காணிப்பு இடம்பெறும் என்றும் ஈஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற நல்லூர் உற்சவகால நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசியபோதே, ஈஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடல் மாநாகரசபை ஆணையாளர் தலைமையில், மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. உற்சவகாலத் தொண்டர்களின் தலைவர்களும் - இக்கலந்துரையாடலில் சமுகமளித்திருந்தனர்.

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

யாழ்.சிறைச்சாலையில், உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த நான்கு இந்திய மீனவர்களும், தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

இந்த வழங்கு விசாரணைகள்- எதிர்வரும் ஆறாம் திகதி யாழ். உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## குழியில்...

குழந்தையே பலியாகியது.

புதிதாக மலசல கூடக்குழி அமைப்பதற்காக, ஆறடி ஆழமான குழி ஒன்று தோண்டப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் இரவு பெய்த கடும் மழையினால் குழியில் நீர் நிரமபியது.

இதனை அறியாத குழந்தை- நேற்றுக்காலை 8 மணியளவில், தவறுதலாக, மலசலகூடக் குழியில் வீழ்ந்துவிட்டது. நீண்ட நேரமாகியும் குழந்தையைக்காணாத பெற்றோர் குழந்தையைத் தேட முற்பட்ட சமயம் - குழந்தை மலசல கூடக்குழியில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்டது.

பதற்றமடைந்த பெற்றோர் - உடனடியாகக் குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் வழியில் குழந்தை மரணமடைந்தது.

மரணவிசாரணையின் பின், நேற்றுமாலை குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (லி)

## தமிழ்ச்செல்வன்...

பல்வேறு பகுதிகளுக்கும் செல்லவுள்ள புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர்- போராளிகளையும், பொதுமக்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் உட்படப் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில், மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குத் தமிழ்ச்செல்வன் புறப்படவிருந்தபோதும், அவரது பயணம் 6 மணித்தியாலங்கள் தாமதமானதாக, செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழீழ காவல்துறையினர் 24 பேர் வவுனியா ஊடாக மட்டக்களப்புக்கு!

தமிழீழக்காவல்துறையினர், முதன்முறையாக இன்று - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கடந்துசெல்லவுள்ளனர் என்று, இராணுவத் தரப்பில் கருத்து வெளியிட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று, வன்னியில் இருந்து வவுனியாவைச் சென்றடைந்து மட்டக்களப்புக்கு இவர்கள் செல்லவுள்ளனர்.

தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த 24 பேர், இவ்வாறு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் - முன்னர் இவ்வாறான பயணங்களுக்கு அனுமதி மறுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## படையினரின் யுத்தநிறுத்த...

திகாரி - ஹரீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, அண்மைக்காலமாக குடாநாட்டில் இராணுவத்தினரின் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பாக, விரிவாக ஆராயப்பட்டது.

வடமராட்சிக் கிழக்கு பொறப்பதியில், இராணுத்தினரால் புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் குடியிருப்புப் பகுதிக்கு அண்மையில் உள்ள பற்றைக்காடுகளில், புதிய காவலரண் அமைக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் காலைக்கடன்களைக் கழிக்க முடியாமல் இருப்பதாகவும்,புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் - திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில், பொதுமக்களால் அமைக்கப்பட்ட லெப். செல்லக்கிளி நினைவு தூபி திரை நீக்கம் செய்யும் நிகழ்வில்,

செல்லக்கிளியின் நினைவுத்தூபியை ஆயுத முனையில் மக்களை அச்சுறுத்தி, தகரங்களால் மறைக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் யுத்தநிறுத்த மீறல்கள் என விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் குறித்து கவனத்தில் எடுப்பதாக கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

## வியாசனின் உலைகளம்...

அன்புமாறனும் நிகழ்த்தினார்.

இளம்பரிதியின் தலைமையுரையினைத் தொடர்ந்து, வே.பாலகுமாரனின் சிறப்புரை இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை - தமிழீழ துணை அரசியற்பொறுப்பாளர் தங்கன், செல்வி. தங்கம்மா அப்புராக்குட்டிக்கு வழங்கினார்.

மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை சதாசிவம்ஜயர், அருட்தந்தை மரியசேவியர், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் தேவராசா, சொக்கன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையினை- திருநாவுக்கரசு, ஐ.சாந்தன், அ.சண்முகதாஸ் ஆகியோர் வழங்கினர்.

இறுதியாக ஏற்புரையை - கவிஞர் புதுவை இரத்தினதுரை வழங்கினார்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் வன்னியசிங்கம்

காரைநகர் பெரியமணலைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வன்னியசிங்கம் 01.08.2003 இல், பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சுந்தரம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு, நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், மிதுனனின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தகவல்:*
க.ஆனந்தன்
க.அருள்
(மைத்துனர்மார்)

*பாடசாலை ஒழுங்கை,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1534 திகதி: 01.08.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | 8 | 8 | 2 | 1 | 2 | 2 |


## முக்கிய அறிவித்தல்

Serendib Express

## Serendib Express Airlines

எமது நிறுவனத்தின் சகல விமானப்பயணச் சேவைகளும், இன்றுமுதல் (02.08.2003) 6 ஆம் திகதிவரை தவிர்க்கமுடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எம் சேவையில் விமானப்பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பிரயாண மாற்று ஒழுங்குகளைச் செய்வதன் பொருட்டு எமது யாழ்ப்பாணக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தொடர்புகட்கு
021-2223916
0777-714871

(சி-1298)

செரண்டிப் விமானசேவை யாழ்ப்பாணக் காரியாலயம்
இல.13, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

### S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
*இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1299)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.